19.06.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நத்தம் முந்திரிக்கு தனி ருசி விளைச்சல், விலை 'ஓஹோ'



திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் முந்திரி விளைச்சல் அதிகரித்துள்ளது. இவற்றிக்கு தனி ருசி இருப்பதால் கிலோ ரூ.80 க்கு கொள்முதல் செய்கின்றனர்.நத்தம் சொக்கன்குளம், அஞ்சுகுழிப்பட்டி, கோணப்பட்டி கரடுகளில் 500 ஏக்கரில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது; இவற்றிக்கு ருசி அதிகம். இந்த முந்திரி விதைகள் பண்ருட்டிக்கு அனுப்பப்படுகின்றன.கடந்த 2 ஆண்டுகளாக வறட்சியால் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு மழை பெய்ததால், விளைச்சல் அமோகம். முந்திரி விதைகள் நல்ல திரட்சியாக இருப்பதால் வியாபாரிகள் விரும்பி வாங்குகின்றனர்.தற்போது விதைகளை கிலோ ரூ.80க்கு கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.கோணப்பட்டி விவசாயி சின்னக்காளை

கூறுகையில், "நான்கு ஏக்கரில் முந்திரி சாகுபடி செய்துள்ளேன். இந்த ஆண்டு விளைச்சலும், விலையும் அதிகம். கடந்த ஆண்டை விட ரூ.30 வரை அதிகம் கிடைத்தது," என்றார்.

## கொடைக்கானலில் நெய்மீன் ரூ.1000

கொடைக்கானல் :கொடைக்கானலில் நெய்மீன் கிலோ ரூ.1000க்கு விற்கப்பட்டதால் அசைவ பிரியர்கள் அதிர்ச்சியடைந்தனர்.கொடைக்கானலில் துாத்துக்குடி, ராமேஸ்வரம் பகுதிகளில் இருந்து வரும் மீன்களே விற்பனையாகின்றன. நேற்று நெய்மீன் கிலோ ரூ.1000 க்கு விற்கப்பட்டது. மீன் பிரியர்கள் அதிர்ச்சியடைந்தாலும், வேறு வழியின்றி வாங்கி சென்றனர்.மீன் வியாபாரி ஒருவர் கூறியதாவது: நெய்மீனுக்கென்றே இங்கு 'ருசிகர்'கள் உள்ளனர். அவர்களுக்கென்றே ராமேஸ்வரத்தில் இருந்து கொண்டு வந்து விற்கிறோம். அங்கு கூடுதல் விலை கொடுத்துதான் வாங்கி வருகின்றோம். அதிக கிராக்கி உள்ள மீன் என்பதால், ரூ. ஆயிரம் என்றாலும் வாங்கிச் செல்கின்றனர், என்றார்.

## ஆந்திர நாவல்பழம் கிலோ ரூ.300



திண்டுக்கல்: மருத்துவ குணமுள்ள ஆந்திர நாவல்பழம் திண்டுக்கல்லில் கிலோ ரூ.300க்கு விற்பனையாகிறது.திண்டுக்கல்லில் மருத்துவ குணமுள்ள ஆந்திர நாவல்பழம் விற்பனைக்கு வந்துள்ளது. சர்க்கரை நோய்க்கு நாவல்பழமும், அதன் விதைகளும் சிறந்த மருந்தாக பயன்படுகிறது. இதனால், நாவல் பழத்தை சர்க்கரை நோயாளிகள் விரும்பி உண்கின்றனர்.ஏக்கருக்கு 40 மரக்கன்றுகளும், எக்டேருக்கு 100 கன்றுகளும் நடலாம். ஐந்தாண்டு பயிர். நான்கு ஆண்டுகளில் சாகுபடிக்கு வந்துவிடும். மா மரம் போலவே, அடர்த்தியாக வளரும். ஆந்திராவிலுள்ள ரேணிகுண்டா, குண்டூர் பகுதிகளிலிருந்து அதிகமான நாவல்பழம் தமிழகத்திற்கு விற்பனைக்கு வருகிறது. தினமும் 4.3 டன் நாவல்பழம் திண்டுக்கல்லுக்கு விற்பனைக்கு வருகிறது. தொடர்ச்சியாக ஜூன் முதல் ஆகஸ்ட் வரை சீசன் உள்ளதால், விற்பனையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தற்போது, கிலோ ரூ.300க்கு விற்பனையாகிறது.தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கிஷோர்குமார் கூறியதாவது: அடர்ந்த வனத்திலுள்ள காடுகளில் சேகரிக்கப்பட்ட நாவல் பழங்கள் தமிழகத்தில் குறைந்தளவே விற்பனைக்கு வருகிறது. ஆனால், ஆந்திராவில் 'சீசன்' துவங்கியுள்ளதால் அதிகளவில் சதைப் பற்றுள்ள நாவல்பழம் விற்பனைக்கு வந்துள்ளன. சுண்ணாம்பு சத்தும், நார் சத்தும் நிறைந்துள்ளதால் வளர் இளம் பெண்கள், சர்க்கரை நோயால் அவதியுறுவோர் சாப்பிடலாம், என்றார்.விதையில்லா நாவல்பழம் உதவி இயக்குனர் கூறியதாவது: நாவல்பழத்தை தனிப்பயிராக பயிரிட விவசாயிகள் விரும்புகின்றனர். இதனால், விதையில்லா நாவல் சாகுபடியை ஊக்குவிக்க முடிவு செய்தோம். அதன்படி, நாவல் ஒட்டுக்கன்றுகளை தயார் செய்து வளர்த்துள்ளோம். விவசாயிகள் கன்றுகளை பெற அணுகலாம். அனைத்து அரசு உதவிகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும். விலை

லாபகரமாக கிடைப்பதால் விவசாயிகள் தயக்கமின்றி பயிரிடலாம், என்றார்.மேலும் விபரங்களுக்கு 94421 06453 தொடர்பு கொள்ளலாம்.

## உர இருப்பு குறித்து விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ்., : வேளாண்துறை புது திட்டம்

விருதுநகர் :வேளாண் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் உர இருப்பு குறித்து விவசாயிகளுக்கு அலைபேசி மூலம் எஸ்.எம்.எஸ்., தெரிவிக்க வேளாண்துறை திட்டமிட்டுள்ளது.மாவட்டங்களில் வேளாண் கூட்டுறவு வங்கிகள், தனியார் விற்பனை நிலையங்களில் உரம் விற்கப்படுகிறது. இவற்றின் உர இருப்பு குறித்து விவசாயிகள் நேரில் சென்றுதான் தெரிந்துகொள்ள வேண்டும். இந்நிலையில் அதுகுறித்து அலைபேசியில் எஸ்.எம்.எஸ்., மூலம் விவசாயிகளுக்கு தகவல் தெரிவிக்க வேளாண் துறை புதிய திட்டமிட்டுள்ளது.

அத்துறை உயரதிகாரி ஒருவர் கூறுகையில், “www.tnagrisnet.tn.gov.in என்ற தமிழக அரசின் வேளாண்துறை இணையதளத்தில் பண்ணை பயிர் மேம்பாட்டு திட்ட பகுதி உள்ளது. ஒன்றிய வாரியாக வேளாண் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பில் உள்ள யூரியா, டி.ஏ.பி., எம்.ஓ.பி.,காம்ப்ளக்ஸ் உள்ளிட்ட உர விபரங்கள் குறித்து வாரம்தோறும் அதன் பொறுப்பாளர்கள் 'ஆன்ட்ராய்டு' அலைபேசியில் இருந்து இணையதள முகவரியில் பதிவு செய்து வருகின்றனர். அதற்கான 'சாப்ட்வேர்' அவர்களது அலைபேசியில் பதிவிறக்கம் செய்து தரப்பட்டுள்ளது. விவசாயிகளின் அலைபேசி எண்கள் வேளாண்துறையிடம் உள்ளன. துறைதொடர்பான பல்வேறு தகவல்கள் அவர்களுக்கு எஸ்.எம்.எஸ்.,மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன. இதுபோல் வட்டார வாரியாக உர இருப்பு குறித்து எஸ்.எம்.எஸ்., அனுப்ப புது திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில்

இது நடைமுறைப்படுத்தப்படும். இதனால் விவசாயிகளுக்கு அலைச்சல் மிச்சமாவது மட்டுமின்றி தங்கள் பகுதி விற்பனை நிலையங்களில் உர இருப்பு குறித்து தெளிவாக தெரிந்து கொள்ளலாம். வெளிப்படை தன்மை ஏற்பட்டு தேவையற்ற சர்ச்சைகளும் தவிர்க்கப்படும்,"என்றார்.

## ஆண்டு முழுவதும் பூப்பறிக்கலாம்: சம்பங்கியில் புதிய முறை



திண்டுக்கல் :திண்டுக்கல் அருகே உள்ள விராலிப்பட்டி விவசாயி பெரியசாமி, ஆண்டு முழுவதும் பூப்பறிக்கும் வகையில் புதிய தொழில்நுட்ப முறையில் சம்பங்கி, மல்லிகையை சாகுபடி செய்துள்ளார்.இதற்காக அவர் ஒரு ஏக்கரில் 'பாலி ஹவுஸ்' அமைத்துள்ளார். அதில் சம்பங்கி, மல்லிகைப் பூக்களை ஒருங்கிணைத்து பயிரிட்டுள்ளார். தரைப்பகுதியில் மல்லிகையும், அதற்கு ஊடுபயிராக தொட்டியில் சம்பங்கியும் உள்ளன. ஒவ்வொரு செடிக்கும் தேவையான தண்ணீர் கிடைக்கும் வகையில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.இருவகை செடிகளும் மேலும், கீழும் இருக்கும்படி பயிரிட்டுள்ளதால், அவற்றிற்கு சத்துக்கள் கிடைப்பதிலும் பாதிப்பு இல்லை. தினமும் 10 கிலோ மல்லிகையும், 5 கிலோ சம்பங்கியும்

கிடைக்கின்றன.விவசாயி பெரியசாமி கூறியதாவது: ஒருங்கிணைந்த முறையால் 2 ஏக்கரில் பயிரிட வேண்டிய பூக்களை, ஒரு ஏக்கரில் சாகுபடி செய்துள்ளேன். பனிக்காலத்தில் மல்லிகை பூக்காது. 'பாலி ஹவுசில்' வெப்பநிலை மாறாது என்பதால் ஆண்டு முழுவதும் பூக்கிறது. மழை பெய்யும்போது பூக்காது. 'பாலி ஹவுசுக்கு,' மானியம் போக ரூ.14 லட்சம் செலவு செய்தேன். இரு பூக்களிலும் தினமும் ரூ.2 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது. ஆண்டு முழுவதும் வருமானம் வருகிறது, என்றார்.

## தாவர வகை பூச்சிக்கொல்லி மருந்துகள் பயிருக்கும், உயிருக்கும் உத்தரவாதம்

மதுரை:'விவசாயிகள் பயிர் பாதுகாப்புக்கு பூச்சிக்கொல்லி மருந்துகளை புறக்கணித்து, தாவர வகை பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும்,' என வேளாண் துறை வலியுறுத்தியுள்ளது."வேம்பும், வேளாண்மையும் பழங்காலம் முதல் இணைந்த ஒன்று. இறை நம்பிக்கையுடன் இயற்கை வைத்தியமாகவும், வேம்பு பொருட்கள் பயன்படுகின்றன. பயிர் பாதுகாப்பில் வேம்பின் பெருமையை உழவர்கள் முழுமையாக உணர வேண்டும்," என்கிறார் மதுரை நீர் மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் இந்திராகாந்தி. அவர் மேலும் கூறியதாவது: வேப்பங்கொட்டை, வேப்பெண்ணெய் மற்றும் வேப்பம் புண்ணாக்கில் உள்ள முக்கிய ராசாயன பொருளான 'அஸாடிராக்ஷன்' எனும் மூலக்கூறு பயிர்களை தாக்கும் பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்துகிறது. வேம்பு சார்ந்த பொருட்கள் ரசாயன பூச்சி கொல்லிகளுக்கு சமமான வீரியம் உடையவை. சில வகையான பூச்சிகள் பூச்சிக்கொல்லி மருந்துகளை எதிர்த்து பெருகக்கூடிய தன்மையுடையது. ஆனால் வேம்பு பொருட்களை எதிர்த்து அவைகளால் பெருக முடியாது.

பல்வேறு பயிர்களை தாக்கும் பூச்சிகள், வேம்பு பொருட்களைப் பயிர் பாதுகாப்பு மருந்தாக பிரயோகித்த பயிர்களை உண்ணாமல் வெறுத்து ஒதுக்கி விடுவதால் பயிர்கள் பாதுகாக்கப்படுகிறது. இப்பொருட்கள் உபயோகித்த பயிரை பூச்சிகள் உண்ணும்போது, அவற்றின் வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன், முட்டைகளின் எண்ணிக்கை மற்றும் பொரிக்கும் திறனும் குறைகிறது. வேப்பங்கொட்டைச் சாறு: வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் தயார் செய்ய, நன்கு காய்ந்த தூள் செய்யப்பட்ட பத்து கிலோ வேப்பங்கொட்டையை ஒரு சாக்குத் துணியில் முடிச்சாக கட்டி பத்து லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின் மூட்டையை எடுத்து விட்டு, வடிகட்டிய கரைசலுடன் 190 லிட்டர் தண்ணீர் சேர்த்து 200 லிட்டராக ஆக்கவும், அதுனுடன் ஒட்டுத்

திரவமான 'டீப்பால்' 200 மில்லி அல்லது 'ைஹவெட்' 200 மில்லி கலந்து கைத்தெளிப்பான் மூலம் ஒரு ஏக்கர் பயிருக்கு தெளிக்க வேண்டும்.

வேப்பெண்ணெய் கரைசல்: வேப்பெண்ெணய் கரைசல் தயாரிக்க, 200 மில்லி டீப்பால் எனும் ஒட்டு திரவத்தை ஒரு வாளியில் எடுத்து, அதனுடன் 6 லிட்டர் வேப்ப எண்ணெய்யை சிறிது சிறிதாக ஊற்றி நன்கு கலக்க வேண்டும். இதனுடன் 200 லிட்டர் தண்ணீரை குச்சி வைத்து கலக்கி கொண்டே ஊற்ற வேண்டும். பால்போல் இருக்கும் இக்கரைசலை கைத்தெளிப்பான் கொண்டு ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். தாவர பூச்சிக்கொல்லி மருந்து பயிருக்கும், உயிருக்கும் உத்தரவாதம் தருகிறது என்றார்.

தாவர வகைபூச்சிக்கொல்லி:கால்நடைகள் உண்ணாத ஆடாதோடா, நொச்சி இலைகள். ஒடித்தால் பால் வரும் எருக்கு, உமத்தை இலைகள், தண்டுகள். கசப்பு சுவை மிக்க வேம்பு, சோற்றுக்கற்றாழை இலைகள், தண்டு, விதைகள். உவர்ப்பு சுவை மிக்க காட்டாமணக்கு.

கசப்பு, உவர்ப்பு சுவை மிக்க வேப்பங்கொட்டை, எட்டிக்கொட்டை போன்றவை தாவர வகை பூச்சிக்கொல்லிகள். இவை பயிர் வளர்ச்சிக்கும், அவற்றை உண்ணும் உயிரினங்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது.

## ரூ. 6 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்:நாமக்கல், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த பருத்தி ஏலத்தில், ஆறு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 500 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,490, குறைந்த பட்சம், 3,965 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிக பட்சம், 4,322, குறைந்த பட்சம், 3,859 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 4,720, குறைந்த பட்சம், 4,520 ரூபாய்க்கு ஏலம் போனது.

கடந்த நான்கு மாதத்துக்கு பின், தற்போது சுரபி ரகம் ஏலத்துக்கு வருவது குறிப்பிடத்தக்கது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 500 மூட்டை பருத்தி, ஆறு லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## ஜூன், 24ல் நாட்டுக்கோழி வளர்ப்போருக்கான பயிற்சி

நாமக்கல்:"நாட்டுக்கோழி வளர்ப்போருக்கு, கோடைகால நோய் பராமரிப்பு முறைகள் மற்றும் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்த பயிற்சி முகாம், ஜூன், 24ம் தேதி நடக்கிறது' என, தலைவர் கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல்-திருச்சி சாலை, கால்நடை மருத்துவமனை வளாகத்தில் உள்ள, கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில், கோடைகால நோய் பராமரிப்பு முறைகள் மற்றும் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில், ஜூன், 24ம் தேதி, மதியம், 1.30 மணிக்கு பயிற்சி முகாம் நடக்கிறது. பயிற்சி முகாமில், ஆர்வமுள்ள விவசாயிகள், நாட்டுக் கோழி வளர்ப்போர் பங்கேற்கலாம். மேலும் விவரங்களுக்கு, 04286 233230 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை தொடர்ந்து உயர்வு

நாமக்கல்:நாமக்கல் மண்டலத்தில், முட்டை விலை, 4.20 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், ஹோட்டல்களில் முட்டை உணவுகளின் விலையும் அதிகரித்துள்ளது.ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில், கடும் வெயில் காரணமாக, ஒரு கோடி கோழி கடந்த மாதம் இறந்தன. அதனால், நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியில், 25 சதவீதம் அளவு திடீரென குறைந்தது. அந்த மாநிலங்களில், தற்போதுதான் பண்ணைகளில் குஞ்சு விடும் பணியை பண்ணையாளர்கள் துவக்கி உள்ளனர்.

முட்டை உற்பத்தி பழைய நிலைக்கு வர, இரண்டு முதல், மூன்று மாதங்களாகும். இந்நிலையில், கேரளா மற்றும் தமிழகத்தில் மழை துவங்கி உள்ளதாலும், கேரளத்தில் மீன்பிடி தடை காலம் அமலில் இருப்பதாலும், முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது.

முட்டை மற்றும் கறிக்கோழிக்கு தமிழகத்தையே, கேரள மாநிலம் சார்ந்துள்ளது. ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில், கோழிகள் இறப்பால் முட்டை உற்பத்தி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால், அம்மாநிலங்களுக்கும் முட்டை தேவைக்கு, தமிழகத்தையே சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மே மாதம் இறுதி வரை, 3.90 ரூபாய்க்கு விற்கப்பட்ட முட்டை, இம்மாத துவக்கத்தில், நான்கு ரூபாய்க்கு உயர்ந்தது. அதை தொடர்ந்து, முட்டை விலை தொடர்ந்து அதிகரித்து நேற்று, 4.20 ரூபாய் என, தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு (நெக்) அறிவித்துள்ளது. முட்டை விலை, ஐந்து ரூபாய் வரை உயர வாய்ப்பு உள்ளதாகவும், இம்மாதத்தில், 4.50 ரூபாய் வரை உயரும் என்றும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து, நாமக்கல் கோழிப்பண்ணையாளர்கள் சம்மேளன செயலாளர் இளங்கோ கூறியதாவது:

கோடை வெயில் தாக்கம் காரணமாக, ஒரு கோடி கோழிகள் இறந்ததால், 25 சதவீதம் வரை முட்டை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகம், கேளாவில் மழை துவங்கி உள்ளதால், நுகர்வு அதிகரித்துள்ளது. அதன் காரணமாக முட்டை விலை, 4.20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. அதன் விலை, 4.50 ரூபாய் வரை உயர வாய்ப்பு உள்ளது. தற்போது, கடைகளில், ஒரு முட்டை விலை, ஐந்து ரூபாய் வரை விற்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## ஜுன், 26ல் விவசாயிகள்குறை தீர்க்கும் கூட்டம்

நாமக்கல்:"விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஜுன், 26ம் தேதி நடக்கிறது' என, நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், ஜுன், 26ம் தேதி, மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், காலை, 10.30 மணிக்கு நடக்கிறது. மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகிக்கிறார். கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண், தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண் பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம், மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் பங்கேற்று, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே, மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## முட்டை விலை 420 காசாக நிர்ணயம்

நாமக்கல்:தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 420 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 411 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 9 காசு உயர்த்தி, 420 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.வடமாநிலங்களில், தொடர்ந்து முட்டை உற்பத்தி குறைந்து வருவதாலும், தமிழகம், கேரளாவில் மழை துவங்கி உள்ளதாலும், நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை நாளுக்கு நாள்

அதிகரித்து வருகிறது. இந்த விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 420, ஹைதராபாத், 399, விஜயவாடா, 391, பர்வாலா, 353, மும்பை, 439, மைசூர், 434, பெங்களூரு, 432, கொல்கத்தா, 414, டில்லி, 363.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கிலோ, 69 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டைக் கோழி விலையை, எவ்வித மாற்றமும் செய்யாமல், அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

பல்லடத்தில், நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கிலோ, 87 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையை, 1 ரூபாய் உயர்த்தி, கிலோ, 88 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

### விவசாயிகள் - வியாபாரிகள்ஒருங்கிணைப்பு கூட்டம்

ஈரோடு:வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை சார்பில், ஈரோடு வேளாண் வணிகம் துணை இயக்குனர் சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் ஒருங்கிணைப்பு கூட்டம், மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்தது.மொடக்குறிச்சி உதவி வேளாண் அலுவலர் சுரேந்தர் வரவேற்றார். ஈரோடு வேளாண் வணிக அலுவலர் பூர்ணிமா, எழுமாத்தூர், அவல்பூந்துறையில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைப்பது, பொருளீட்டு கடன் பெறுவது குறித்து விளக்கினர்.எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூட மேற்பார்வையாளர் பழனிசாமி நன்றி

கூறினார். எழுமாத்தூர், அவல்பூந்துறை, மொடக்குறிச்சி பகுதி விவசாயிகள், வியாபாரிகள் பங்கேற்றனர்.

### பெரம்பலூரில் மழை

பெரம்பலூர்:பெரம்பலூர் மாவட்டத்தில், நேற்று மாலை, பரவலாக நல்ல மழை பெய்தது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள துறைமங்கலம், அரணாரை, செஞ்சேரி, ஆலம்பாடி, செங்குணம், சிறுகுடல், தண்ணீர்பந்தல், வாலிகண்டபுரம், எறையூர், ஆலத்தூர்கேட், இரூர், செட்டிக்குளம், சத்திரமனை, பாடாலூர், வேப்பந்தட்டை, கிருஷ்ணாபுரம், அரும்பாவூர், எசனை, கோனேரிபாளையம், பூலாம்பாடி, குரும்பலூர், அம்மாபாளையம், நக்கசேலம், எளம்பலூர், சோமண்டாபுதூர், வடக்குமாதவி, சித்தளி, பேரளி, குன்னம், மேலமாத்தூர், எருத்துக்காரன்பட்டி, அல்லிநகரம், அடைக்கம்பட்டி உட்பட பல்வேறு கிராமங்களில், நேற்று மாலை, 5 மணி முதல், 5. 30 மணி வரை பலத்த மழை பெய்தது.

### 1,300 இடங்களில் பயிர் அறுவடை பரிசோதனை: தஞ்சை கலெக்டர் தகவல்

தஞ்சாவூர்:தஞ்சாவூர் மாவட்டத்தில், 1,330 இடங்களில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது, கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகேயுள்ள பழவந்தான்கட்டளை கிராமத்தில் நெல் பயிர் விளைச்சல், பயிர் அறுவடையை புள்ளியியல் துறை முதன்மைச் செயலர் இறையன்பு ஆய்வு செய்தார்.

அப்போது, கலெக்டர் சுப்பையன் கூறியதாவது:பயிர் விளைச்சல் மதிப்பீடு, பயிர் அறுவடை பரிசோதனை பொருளியல், புள்ளியியல் துறை, வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை அலுவலர்களை கொண்டு, புள்ளியியல் கோட்பாட்டின்படி நடத்தப்படுகிறது.இந்த ஆய்வு முடிவின்படி, ஹெக்டருக்கு, ஏழு மெட்ரிக் டன் என்ற அளவில் மகசூல் கிடைத்துள்ளது.இந்த ஆய்வு முடிவுகள் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் தொகுக்கப்பட்டு, அரசின் திட்டமிடல் பணிகளுக்கும், உணவு கொள்கைகளை வகுப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் ஓராண்டில் குறுவை, சம்பா, கோடை ஆகிய பருவ வாரியாகவும், பொது பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டம், தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில், 1,330 இடங்களில் பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இவ்வாறு தெரிவித்தார்.ஆய்வில், புள்ளியியல் துறையின் கடலூர் மண்டல இணை இயக்குநர் காமராஜ், வேளாண் துறை இணை இயக்குநர் சேகர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## இடுக்கி மாவட்டத்தில் பலத்த மழை:சுற்றுலா பயணிகளுக்கு எச்சரிக்கை

மூணாறு:இடுக்கி மாவட்டத்தில் தென் மேற்கு பருவ மழை வலுவடைந்துள்ளதால், மாவட்ட சுற்றுலாதுறையினர் பயணிகளுக்கு முன்னெச்சரிக்கை விடுத்துள்ளனர். இடுக்கி மாவட்டத்தில் தென் மேற்கு பருவ மழை வலுவடைந்து, கடந்த மூன்று நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. வரும் நாட்களிலும் மழை அதிகரிக்கும் என்பதால், மாவட்டத்தில் மண் சரிவு உள்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளன.

ஆகவே சுற்றுலா பகுதிகளில் பயணிகளுக்கு முன்னெச்சரிக்கை விடப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட

சுற்றுலா துறையினர் அறிவித்துள்ளனர். முக்கிய சுற்றுலா பகுதிகளில் விபத்து மற்றும் பாதுகாப்பு குறித்து முன்னெச்சரிக்கை போர்டுகள் வைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வெள்ளப் பெருக்கம் அபாயம் உள்ளதால், ஆறு மற்றும் நீர் வீழ்ச்சி போன்றவற்றின் அருகில் செல்ல கூடாது எனவும், மண் சரிவு அபாயம் உள்ளதால், ரோட்டின் ஓரங்களில் வாகனங்களை நிறுத்தக் கூடாது எனவும் பயணிகள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

மாவட்டத்தில் மூணாறு-நேரியமங்கலம், முண்டக்கயம்-மூணாறு, தொடுபுழா-இடுக்கி, போன்ற ரோடுகளில் மண் சரிவு ஏற்பட வாய்ப்பு கூடுதலாக உள்ளதால், இந்த வழிகளில் செல்லும் டிரைவர்கள் அதிக கவனத்துடன் வாகனங்களை ஓட்டிச் செல்ல வேண்டும் எனவும், பாறைகளில் வழுக்கும் தன்மை கூடுதலாக உள்ளதால், டிரக்கிங் செல்வதை பயணிகள் தவிர்க்க வேண்டும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கன்ட்ரோல் ரூம்: மாவட்டத்தில் மழை அதிகரித்துள்ளதால், இடுக்கி கலெக்டர் அலுவலகம் மற்றும் தாலுகா அலுவலகங்களில் 24 மணி நேரம் செயல்படும் விதத்தில் கன்ட்ரோல் ரூம்கள் திறக்கப்பட்டுள்ளன. இடுக்கி கலெக்டர் அலுவலகம் :04862-232 242, 232 303, தேவிகுளம் தாலுகா அலுவலகம்:04865-264 231, உடும்பன்சோலை: 04868-232 050, தொடுபுழா: 04862-222 503, பீர்மேடு:04869-232 077, இடுக்கி: 04862-235 361 போன்ற தொலை பேசி எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

## பயிர் காப்பீடு வழங்கும் விழா

ராமநாதபுரம்:மாதவனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது. துணைப்பதிவாளர் செண்பக ராஜ், கள அலுவலர் ரவிச்சந்திரன், சங்கத்தலைவர் தாதா ஹயாத்து, துணைத்தலைவர் முனியாண்டி, செயலாளர் கபிராதன் பங்கேற்றனர். ஆர்.எஸ்.மங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடந்த விழாவிற்கு, கூட்டுறவு சங்க தலைவர் எஸ்.சுப்பிரமணியன் தலைமை வகித்தார். துணை தலைவர் ராசு,முன்னிலை வகித்தார். கூட்டுறவு சங்க செயலர் எம்.எஸ்.சுப்பிரமணியன், கள அலுவலர் அருணகிரி உட்பட பலர் பங்கேற்றனர். பின்னர் பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

## காய்கறிகளில் 40 வகை பூச்சிக்கொல்லி மருந்துகள் கேரள விவசாய பல்கலை கழக சோதனையில் தகவல்

நாகர்கோவில்: கேரளாவில் விற்பனை செய்யப்படும் காய்கறி மற்றும் பலசரக்கு பொருட்களில் 40 வகையான பூச்சிக்கொல்லி மருந்துகள் உள்ளதாக கேரள விவசாய பல்கலை கழகத்தின் ஆய்வகம் அறிவித்துள்ளது. இப்படியே போனால் தமிழக விவசாயிகளின் வியாபாரம் அடியோடு பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. அண்மைகாலமாக தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு வரும் காய்கறிகளில் அளவுக்கு அதிகமான பூச்சிக்கொல்லி மருந்து இருப்பதாகவும், இது கேன்சர் உள்ளிட்ட நோயின் தாக்கத்தை அதிகரிப்பதாகவும் தகவல் பரவி வந்தது. இந்நிலையில் கேரள தோட்டக்கலை துறை அதிகாரிகள் குழுவினர் மதுரை, திண்டுக்கல், கொடைக்கானல், திருச்சி, விருதுநகர், நாகர்கோவில் போன்ற

இடங்களில் ஆய்வு நடத்திய போது கேரளாவில் தடை செய்யப்பட்ட பல பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்துவது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாக கலப்பதால் மனிதர்களை பாதிப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது. இதை தொடர்ந்து கேரள அரசு சார்பில் தமிழக அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில், தமிழக விவசாயிகளின் பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாட்டை கட்டுப்படுத்தாத பட்சத்தில் அது இருமாநில மக்களையும் பாதிக்கும் என்று கூறப்பட்டிருந்தது. தற்போது தமிழகத்தில் இருந்து அனுப்பப்படும் காய்கறிகள் செக்போஸ்டுகளில் நிறுத்தி வைக்கப்படுகிறது. பூச்சிக்கொல்லி மருந்து கலந்த காய்கறிகள் கொண்டு வந்தால் அந்த லாரி டிரைவரின் லைசென்சை பறிமுதல் செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் திருவனந்தபுரம் வெள்ளையாணியில் செயல்பட்டு வரும் கேரள விவசாய பல்கலை கழகத்தின் ஆய்வகத்தில், காய்கறிகள் பரிசோதனை செய்யப்பட்டதில் 40-க்கும் மேற்பட்ட பூச்சிமருந்துகள் கலந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக இருப்பதையும் இந்த ஆய்வக அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலையில் கேரளாவில் அரசு புறம்போக்கு நிலங்கள், பள்ளிகள், வீட்டு மாடிகள் மற்றும் காலியிடம் எங்கு இருந்தாலும் அங்கெல்லாம் காய்கறிகள் நடவு செய்ய மக்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர். இதற்கான விதைகளை பல்வேறு மகளிர் அமைப்பினர் வீடு வீடாக சென்று விநியோகம் செய்து, பயிரிடும் முறையை எடுத்து சொல்லி வருகின்றனர். காய்கறி உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதன் மூலம், இந்த விஷயத்தில் தமிழகத்தை நம்பி இருக்க வேண்டாம் என்பது கேரளாவின் கணக்கு. குடும்பஸ்ரீ என்ற அமைப்பின் தலைவரான நடிகை மஞ்சுவாரியார் காய்கறி நடவு செய்யும் வீடுகளுக்கு சென்று ஊக்கப்படுத்தி வருகிறார். இப்படி பல்வேறு நடவடிக்கைகளால் கேரளாவில் காய்கறி உற்பத்தி அதிகரித்து வருகிறது.

இன்னும் இரண்டு மாதத்தில் ஓணம் வந்து விடும். இந்த நேரத்தில் தமிழக விவசாயிகள் நல்ல லாபத்துக்கு வியாபாரம் பார்ப்பது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு அது நடக்குமா? என்பது சந்தேகமாகதான் உள்ளது. கேரளா இப்படியே சீரியசாக சென்று கொண்டிருந்தால் தமிழக விவசாயிகள் நிலை கேள்விக்குறியாகி விடும்.

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**

வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: தென்மேற்குப் பருவமழையால் ஆந்திரம், கர்நாடகம், தெலங்கானா ஆகிய இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி: ஆந்திரத்தின் வடக்கு எல்லைக்கும், ஒடிசாவின் தெற்கு எல்லைக்கும் இடையிலுள்ள மத்திய வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. சென்னை உள்பட தமிழகத்தின் வட மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் இடியுடன் மழை பெய்ய வாய்ப்புள்ளது. முன்னறிவிப்பு: தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்த வரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன்

கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார்.

சாரல் மழை: சென்னை மாநகரில் புதன்கிழமை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. குளிர்ந்தக் காற்றுடன் கூடிய சாரல் மழை அவ்வவ்போது பெய்து வருவதால் இதமான காலநிலை நிலவுகிறது.

**குற்றாலத்தில் தொடங்கியது சீசன்! வெள்ளப்பெருக்குடன் ஆரம்பம்**

குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் தண்ணீர் விழத் தொடங்கியுள்ளதையடுத்து, நிகழாண்டு சீசன் இரண்டு வாரங்கள் தாமதமாக வியாழக்கிழமை ஆரம்பமானது.

குற்றாலத்தில் ஆண்டுதோறும் ஜூன் முதல் வாரத்திலேயே சீசன் தொடங்குவது வழக்கம். கேரளத்தில் பருவமழை தொடங்கியதும், குற்றாலம் அருவிகளிலும் தண்ணீர் விழத் தொடங்கிவிடும்.நிகழாண்டு கேரளத்தில் பருவமழை தொடங்கி 10 நாள்களுக்கு மேலாகியும் இங்குள்ள அருவிகளில் தண்ணீர் விழாமல் வறண்டு காணப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை, குற்றாலம் பகுதியில் பெய்த மழை காரணமாக பேரருவி, ஐந்தருவியில் குறைந்த அளவில் தண்ணீர் விழுந்தது.

இந்த நிலையில், புதன்கிழமை இரவு முதல் குற்றாலம், தென்காசி பகுதிகளில் தொடர்ந்து சாரல் மழை பெய்தவாறு இருந்தது. வியாழக்கிழமை காலையில் சுமார் 2 மணி நேரம் பெய்த தொடர் மழை காரணமாக பேரருவி, ஐந்தருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. பிற்பகலில் பேரருவி, ஐந்தருவியில் செம்மண் நிறத்துடன் தண்ணீர் விழத் தொடங்கியது. அருவியில் சிறிய அளவிலான கற்களும் கீழே விழுந்தன.

இதையடுத்து, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி, பேரருவியில்

குளிப்பதற்கு காவல் துறையினர் தடை விதித்தனர். ஐந்தருவியில் ஐந்து கிளைகளிலும் தண்ணீர் அதிகளவில் விழுகிறது. ஆனாலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்த அளவிலேயே இருந்தது.

மேலும் சிற்றருவி, பழைய குற்றாலம் அருவி, புலியருவி ஆகிய அருவிகளிலும் மிதமான அளவில் தண்ணீர் விழுகிறது.

வானிலைத் தகவல்களை அறிய விவசாயிகளுக்கு இலவச எஸ்.எம்.எஸ்.

வானிலை குறித்த முன்னெச்சரிக்கைத் தகவல்களை விவசாயிகள் அறிந்து கொள்வதற்காக இலவச குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) வசதியை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. இந்தச் சேவையை மத்திய வேளாண் துறை அமைச்சர் ராதா மோகன் சிங், தில்லியில் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார். இடி, மின்னல், புயல், மழை ஆகியவை பற்றிய முன்னெச்சரிக்கைத் தகவல்கள் விவசாயிகளுக்கு உதவும் என்பதால், இந்தச் சேவையை அறிமுகம் செய்து வைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

"எம்கிஸான்' (mkisan.gov.in) என்ற இணையதளத்தில் விவசாயிகள் தங்களது செல்லிடப்பேசி எண், தாங்கள் விரும்பும் மொழி ஆகியவற்றைப் பதிவு செய்வதன் மூலம், வானிலைப் பற்றிய தகவல்களை மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை இலவசமாகப் பெற முடியும். அந்த இணையதளத்தில் இதுவரை ஒரு கோடிக்கும் அதிகமான விவசாயிகள் பதிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதவிர, விவசாயிகள் பயிர்க் காப்பீடு குறித்த தகவல்களை அறிந்து கொள்ளவும், பயிர்க் காப்பீடு செய்து பயன்பெறவும், இணையதள சேவை தொடங்கப்பட்டுள்ளது.

**தேனியில் சாரல் மழை**

தேனி மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை பெய்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை ஜூன் மாதம் தொடங்கி ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கும். இந்த ஆண்டு பருவ மழை தாமதமடைந்த நிலையில், மாவட்டத்தில் மானவாரி மற்றும் நெல் விவசாயம் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. கடந்த 2 நாள்களாக இடுக்கி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. தேக்கடியில் வியாழக்கிழமை 3.8 மி.மீ., பெரியாறு அணை நீர்பிடிப்பில் 6.8 மி.மீ. மழை பெய்துள்ளது. தேனி மாவட்டத்தில் தென் மேற்கு பருவக் காற்றால் சாரல் மழை புதன்கிழமை முதல் பெய்யத் தொடங்கியுள்ளது. இதையடுத்து மானாவாரி மற்றும் நெல் விவசாயிகள், கேரள ஏலக்காய் தோட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் பழ மரக்கன்றுகள், ஒட்டுரக நாற்று வழங்க ரூ.2.64 கோடி நிதி ஒதுக்கீடு**

சிவகங்கை மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பழ மரக்கன்று, காய்கறிகள் வீரிய ஒட்டு ரக நாற்றுகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளதால், ரூ. 2.64 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை, விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளதாக, தோட்டக்கலை துணை இயக்குநர் கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியது: சிவகங்கை மாவட்டத்தில் காய்கறி, பழ மரக்கன்று சாகுபடி பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு, தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், ரூ. 2.64 கோடிக்கு மரக்கன்று மற்றும் ஒட்டு ரக நாற்றுகள் வழங்க நிதி

ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், மா ஒட்டுச்செடி, கொய்யா பதியன், முந்திரி ஒட்டுச்செடி, பப்பாளி வீரிய ரக நாற்றுகள் வழங்கப்பட உள்ளன. மா அடர் நடவு முறையில் 100 ஹெக்டேர், உயர் அடர் நடவு முறையில் 5 ஹெக்டேர், கொய்யா 50 ஹெக்டேர், முந்திரி, பப்பாளி தலா 100 ஹெக்டேர் பரப்பளவில் பதியன் செய்ய நாற்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன. உதிரி மலர் சாகுபடியில், மல்லிகை நாற்றுகள் 100 ஹெக்டேர் பரப்பளவில் நடவு செய்ய வழங்கப்பட உள்ளது. மேலும், பசுமை குடில், நிழல் வலைக்கூடம், வெங்காயம் சேமிப்பு கிடங்கு, தேனி வளர்ப்புப் பெட்டி, தேன் எடுக்கும் பெட்டி உள்ளிட்டவை மானியத்தில் வழங்கப்பட உள்ளன.

58 ஹெக்டேர் கத்திரி, 227 ஹெக்டேர் மிளகாய், 35 ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி நாற்றுகளும் நடவு செய்ய மானியத்தில் வழங்கப்பட உள்ளன. இவற்றை பெற விரும்பும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் முன்னுரிமை பதிவேட்டில் முன்பதிவு செய்யவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**சேத்தூரில் நெல் கொள்முதல் மையம்**

ராஜபாளையம் அருகே சேத்தூரில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழக அரசு நெல் கொள்முதல் மையத்தை வியாழக்கிழமை திறந்துள்ளது.

நெல் கொள்முதல் மைய மண்டல அலுவலக மேலாளர் துணை ஆட்சியர் உதயகுமார் தலைமை வகித்து இந்த நெல் கொள்முதல் மையத்தை திறந்து வைத்தார். அலுவலர் கணேசன், தமிழக விவசாய சங்க நிர்வாகி அம்மையப்பன் மற்றும் திரளான விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்த நெல் கொள்முதல் மையத்தில் மோட்டா ரக நெல் நூறு கிலோ ரூ.1410 க்கும், சன்னரக நெல் ரூ.1470 க்கும் வாங்கப்படுகிறது. முதல் நாளிலேயே ஏராளமான விவசாயிகள் நெல் மூட்டைகளை இங்கு கொண்டுவந்தனர். இங்கு நெல் விற்கும் விவசாயிகளுக்கு அன்றே பணம் வழங்கப்படுகிறது.

**சின்ன வெங்காயம் விலை உயர்வு**

பல்லடத்தில் சின்ன வெங்காய விதையின் தேவை அதிகரித்துள்ளதால் வெங்காய விலை உயர்ந்துள்ளது. கடந்த பங்குனி மாதத்தில் வெங்காய அறுவடை காலத்தின்போது ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.12 க்கு கொள்முதல் செய்யப்பட்டது. அறுவடை முடியும் தருவாயில் ரூ.25-ஆக விலை உயர்ந்தது. இந்தாண்டு மழை நன்றாக பெய்ததால் வெங்காயம் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. அதே சமயம் தேவைக்கேற்ப சின்ன வெங்காயத்தின் வரத்து குறைந்து வருகிறது. இதனால், சின்ன வெங்காயம் கிலோ ரூ.40-க்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு, கடைகளில் கிலோ ரூ.60 வரை விற்கப்படுகிறது.

**வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில் வங்கிக் கடன் வழங்கும் விழா**

கோத்தகிரி கெட்டிக்கம்பை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வங்கிக் கடன் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு வங்கித் தலைவர் பி.எச்.சிவாஜி தலைமை வகித்தார். துணைத் தலைவர் நஞ்சு, விவசாயிகள் அணி ஒன்றியச் செயலர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து, மகளிர் குழுக்களுக்கு ரூ.4.5 லட்சம் வங்கிக் கடன் வழங்கினர். நிகழ்ச்சியில் நிர்வாகிகள் தேவன், சென்னன், திலீப்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

**ஜூன் 26-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 26-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் காலை 10.30 மணிக்கு ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண், தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப் பணி, வேளாண் பொறியியல், மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு, வேளாண் விற்பனை, வணிகம், இதர வேளாண் சார்ந்த துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்குத் தீர்வு காண உள்ளனர். எனவே, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜூலை 24-இல் நாட்டுக்கோழி வளர்ப்போருக்கான பயிற்சி**

நாட்டுக்கோழி வளர்ப்போருக்கு கோடைகால நோய் பராமரிப்பு முறைகள், மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்த பயிற்சி ஜூன் 24-ஆம் தேதி நடைபெறுகிறது. இதுகுறித்து கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத் தலைவர் டி.ஆர்.கோபாலகிருஷ்ணமூர்த்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் - திருச்சி சாலையில் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் உள்ள கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் இந்தப் பயிற்சி மாலை 1.30 மணிக்கு நடைபெறும்.

மேலும், விவரங்களுக்கு 04286-233230 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முட்டை விலை தொடர் உயர்வால் உணவுப் பொருள்கள் விலை அதிகரிப்பு**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை வியாழக்கிழமை ரூ.4.20 ஆக நிர்ணயிக்கப்பட்டது. முட்டை விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், ஹோட்டல்களில் முட்டை உணவுகளின் விலையும் அதிகரித்துள்ளது.

ஆந்திரம், தெலங்கானா மாநிலங்களில் கடும் வெயில் காரணமாக சுமார் ஒரு கோடி கோழிகள் கடந்த மாதம் இறந்தன. இதனால், நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியில் 25 சதம் திடீரென குறைந்தது. அந்த மாநிலங்களில் இப்போது தான் பண்ணைகளில் குஞ்சு விடும் பணியை பண்ணையாளர்கள் தொடங்கியுள்ளனர். முட்டை உற்பத்தி பழைய நிலைக்கு வரை இன்னும் 2 முதல் 3 மாதங்கள் வரை ஆகும்.

இந்த நிலையில், கேரளம், தமிழகத்தில் மழை தொடங்கியதுடன், கேரளத்தில் மீன்பிடி தடைக் காலம் அமலில் இருப்பதால், முட்டை நுகர்வு சற்று அதிகரித்துள்ளது. கேரளம் முட்டை, கறிக்கோழிக்கு தமிழகத்தையே சார்ந்துள்ளது. ஆந்திரம், தெலுங்கானாவில் கோழிகள் இறப்பால் முட்டை உற்பத்தி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், அந்த மாநிலங்களுக்கும் முட்டை தேவைக்கு தமிழகத்தையே சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மே மாதம் இறுதி வரை ரூ.3.90-க்கு விற்கப்பட்ட முட்டை இந்த மாதத் தொடக்கத்தில்

ரூ.4.00-க்கு விற்றது. பின்னர், தொடர்ந்து முட்டை விலை அதிகரித்து, வியாழக்கிழமை ரூ.4.20 என தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது. முட்டை விலை ரூ.5 வரை உயர வாய்ப்புள்ளதாகவும், இந்த மாதத்தில் ரூ.4.50 வரை உயரும் எனவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து நாமக்கல்லைச் சேர்ந்த கோழிப்பண்ணை உரிமையாளர் கோஸ்டல் இளங்கோ கூறியது: முட்டை விலை ரூ.4.50 வரை உயர

வாய்ப்புள்ளது. இதனால், உணவகங்களில் முட்டை உணவுகளின் விலையையும் உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றார்.

**வேளாண் காப்பீட்டுத் திட்டம்: இழப்பீட்டு தொகையை விவசாயிகள் வங்கிகளில் பெறலாம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் கடந்த 2013-14-ம் ஆண்டின் சம்பா பயிர் காப்பீட்டுத் தொகையாக காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ரூ. 118 கோடி காப்பீட்டுத் தொகையை தங்களது பகுதியில் உள்ள வேளாண் கூட்டுறவு வங்கிகளை அணுகி விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் டாக்டர் கே.வி.எஸ். குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 2013-14-ல் சம்பா நெல் பயிருக்கு காப்பீடு செய்த விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் ரூ. 118 கோடி இழப்பீட்டுத் தொகை ஒதுக்கியுள்ளது. காப்பீடு செய்த விவசாயிகளுக்கு வேளாண் காப்பீட்டு நிறுவனம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்குத் தற்போது பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. காப்பீட்டுத் தொகை வழங்கு நாள் குறித்த விவரம் அந்தந்த தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் வைக்கப்பட்டுள்ளது. எனவே, காப்பீடு செய்த விவசாயிகள் தங்களுக்கான காப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொள்ளலாம். தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் காப்பீட்டுத் தொகையை வழங்குவதில் ஏதேனும் இடர்பாடுகள் இருந்தால், பின்வரும் அலுவலர்களை அவர்களது செல்லிடப்பேசிகளில் தொடர்பு கொள்ளலாம். புதுக்கோட்டை துணைப் பதிவாளர்- 94442 48543, அறந்தாங்கி துணைப் பதிவாளர்- 81227 52855, புதுக்கோட்டை

மத்திய கூட்டுறவு வங்கி- 94434 11235, புதுக்கோட்டை இணைப் பதிவாளர்- 94432 77335.

**"பயிர் வளர்ச்சிக்கு வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை பயன்படுத்தலாம்'**

பயிர் வளர்ச்சிக்கு வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை பயன்படுத்தலாம் என்றார் வேளாண் இணை இயக்குநர் (பொ) சு. அய்யாசாமி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பயிர்களின் வளர்ச்சிக்கு தழைச்சத்து இன்றியமையாத சத்தாகும். யூரியாவில் 46 சதவீதம் தழைச்சத்து உள்ளது. யூரியாவானது, அமோனியா என்ற வேதிப்பொருளிலிருந்து தயாரிக்கப்படுவதால், காற்றில் கரையும் தன்மையுடன் உள்ளது. யூரியாவில் உள்ள தழைச்சத்தானது ஆவியாகும் என்பதால், பயிர்களுக்கு விவசாயிகள் இடும்போது 5 சதவீதம் இழப்பு ஏற்படுகிறது. இதை போக்குவதற்காக, மத்திய அரசு யூரியா உற்பத்தி செய்யும் நிறுவனங்களை வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை தயாரிக்குமாறு கூறியுள்ளது.

யூரியா தயாரிக்கும் உர நிறுவனங்கள் தங்களது மொத்த யூரியா உற்பத்தியில் 85 சதவீதம் வரை வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை தயாரிக்க இலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை பயன்படுத்துவதால் தழைச்சத்து விரயமாவது தடுக்கப்படுகிறது.

பயிருக்கு இடும் யூரியாவின் அளவில் 5 முதல் 10 சதவீதம் வரை அளவைக் குறைத்துக் கொள்ளலாம். வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவில் உள்ள வேம்பானது மண் மூலம் பரவும் நோய்கள் மற்றும் மண்ணில் உள்ள பூச்சிகள், நூற்புழுக்களுக்கு எதிராக செயல்பட்டு பயிருக்கு பாதுகாப்பு அளிக்கிறது.

எனவே இனிவரும் காலங்களில் சந்தைக்கு வரும் வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை விவசாயிகள் வாங்கி பயனடையலாம். வேம்பு கலந்த யூரியாவின் விலை 50 கிலோ மூட்டை ரூ. 284க்கு விற்பனை செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அமைப்பு**

கடலூர் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் உள்நாட்டு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மற்றும் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை இணைக்கப்பட்டு கடலூர் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை உருவாக்கப்பட்டுள்ளது.

இம்முகமை பரங்கிப்பேட்டை மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இம்முகமையில் புதிதாக மீன், இறால் பண்ணை மற்றும் மீன் குஞ்சு பொறிப்பகங்கள் அமைத்தவர்கள் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

உறுப்பினர்களாக சேருபவர்களுக்கு இம்முகமையின் மூலம் மானிய உதவிகள் அரசிடமிருந்து வழங்கப்பட்டு வருகிறது. எனவே புதிதாக மீன், இறால் பண்ணை, மீன்குஞ்சு பொறிப்பகங்கள், வண்ண மீன் வளர்ப்பவர்கள் தங்களது மீன் பண்ணையினை இம்முகமையில் பதிவு செய்து பயன் பெறலாம். மேலும், விவரங்களுக்கு பரங்கிப்பேட்டை மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தினை 04144-243033 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என்று அந்த செய்திக்குறிப்பில் ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**குவிண்டால் நெல்லுக்கு ரூ.2,500 வழங்க வேண்டும்**

நெல் கொள்முதல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500-ஆக நிர்ணயித்து வழங்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நடப்பாண்டுக்கான நெல் கொள்முதல் விலையை மத்திய அரசு புதன்கிழமை அறிவித்தது. அதாவது நெல் கொள்முதல் விலை ரூ.50 உயர்த்தப்பட்டு ஒரு குவிண்டால் விலை ரூ.1,410 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. ஆனால் இந்த விலை நிர்ணயம் என்பது கடந்த ஆண்டுகளை ஒப்பிடுகையில் மிகவும் குறைவானது என்பது வேதனைக்குரியது.

100 கிலோ நெல் உற்பத்திக்கு ஆகும் செலவு, விவசாயிகளின் உழைப்பு கூலி ஆகியவற்றுடன் கூடுதலாக ரூ.50 சேர்த்து கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்ற எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு பொருட்படுத்தாது தொடர் கதையாக இருக்கிறது என்பதையே தற்போதைய மத்திய அரசின் அறிவிப்பு வெளிப்படுத்துகிறது.

நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500 விலை நிர்ணயிக்க வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

அவர்களின் இந்த நியாயமான கோரிக்கையை ஏற்பது மட்டுமே இதற்கான தீர்வாக இருக்கும். மத்திய அரசின் தற்போதைய நெல் கொள்முதல் விலையால் நாட்டின் ஒட்டுமொத்த வேளாண் தொழிலும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. எனவே நெல் கொள்முதலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500-ஆக மத்திய அரசு நிர்ணயித்து வழங்க வேண்டும் என அந்த அறிக்கையில் தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

**இயற்கை முறை எள் உற்பத்தி பயிற்சி முகாம்**

புதுச்சேரியில் இயற்கை முறையில் அதிக அளவில் எள் உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி முகாம் நிறைவு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு இயற்கை மற்றும் சீரிய தொழில் நுட்பங்கள் மூலம் எள் உற்பத்தி செய்வது குறித்த பயிற்சி விநாயகம்பட்டு கிராமத்தில் ஒரு மாத காலம் நடந்தது. பயிற்சியில் விவசாயிகளுக்கு, அதிக மகசூல் பெறுவதற்கான வழிவகை, அக்னி அஸ்திரம், முட்டை கரைசல், திறன்மிகு நுண்ணுயிர் கரைசல் தயாரிப்பது குறித்த செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், சூரிய சக்தியால் இயங்கும் விளக்கை வைத்து பயிர்களை அழிக்கும் பூச்சிகளை பிடிப்பது குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆத்மா திட்ட இயக்குநர் ரவிப்பிரகாசம் தலைமை தாங்கினார். விவசாயி சுப்பிரமணியன், மதகடிப்பட்டு துணை வேளாண் இயக்குநர் முத்துக்கிருஷ்ணன், சோரப்பட்டு வேளாண் அலுவலர் தமிழ்ச்செல்வன், ஆத்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் சிரஞ்சீவி, கிராம விரிவாக்க பணியாளர் ஆதி நாராயணன் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**தேங்காய்த்திட்டு மீன்பிடி துறைமுகத்தில் ரூ.11 கோடியில் திட்டங்கள்: முதல்வர் அடிக்கல்**

தேங்காய்த்திட்டு மீன்பிடி துறைமுகத்தில் ரூ.11 கோடியில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது. புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி பங்கேற்று அடிக்கல் நாட்டினார்.

இதனைத் தொடர்ந்து ரூ. 2.7 கோடியில் கட்டப்பட்ட பனிக்கட்டி உருவாகும் கூடம் திறக்கப்பட்டது. புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிய பின்னர் முதல்வர் ரங்கசாமி செய்தியாளர்களிடம் கூறியது:

தேங்காய்த்திட்டு மீன்பிடி துறைமுகத்தில் படகு இறக்கும் தளம், நிறுத்தும் தளம், படகு தயாரிப்பு, படகு பழுதுபார்க்கும் தளம் போன்ற திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளோம். இதற்காக ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள 330 மீட்டர் படகு நிறுத்தும் தளத்துடன், மேலும் 200 மீ நீளத்துக்கு இத்திட்டத்தின் மூலம் நீட்டிக்கப்படும். நவீன படகு தளத்தால் சிரமமின்றி தனி இடத்துக்கு இழுக்கப்பட்டு பழுதுபார்க்கும் தளம் அமைக்கப்படும். ஒரே சமயத்தில் ஆறு படகுகள் பழுதுபார்க்க முடியும்.

புதுச்சேரி உலக வங்கி நிதியுதவியுடன் கடலோர பேரிடர் அழிவுகளை குறைக்கும் திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் புதுச்சேரி மீன்பிடி துறைமுகத்தை மறுகட்டமைப்பு மற்றும் நவீனப்படுத்துதல் போன்ற திட்டங்கள் மூலம் வலைபின்னும் கூடம், மீன் பதப்படுத்தும் கூடம், பணிமனை கட்டப்பட்டு மீன்வளம், மீனவர் நலத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் பனிக்கட்டி உருவாக்கும் கட்டடம் கட்டப்பட்டு தற்போது திறக்கப்பட்டது. இக் கூடம் ரூ.2.70 கோடியில் அமைக்கப்பட்டது. இதில் 800 சதுர மீட்டர் பரப்பில் நாளொன்றுக்கு 40 டன் பனிக்கட்டி உருவாக்க முடியும். இதை பராமரிக்கத் தேவையான மின்சாதனங்கள் மற்றும் மின் உற்பத்தி சாதனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு தயாரிக்கப்படும் பனிக்கட்டிகள் மீன்பிடி படகு உரிமையாளர்கள், வம்பாகீரப்பாளையம், வீராம்பட்டினம் மீனவர்கள், மீன்வியாபாரிகள், மீன் ஏற்றுமதியாளர்கள், முகவர்கள் தேவையை பூர்த்தி செய்யும் என்றார். நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் சபாபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் பன்னீர்செல்வம், தலைமைச் செயலர் மனோஜ் பரிதா உள்பட பலர் பங்கேற்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

**மரவள்ளி கிழங்கு விலை சரிவு விவசாயிகள் கவலை**

பரமத்திவேலூரில் மரவள்ளி கிழங்கு விலை சரிவடைந்து வருவதால், மரவள்ளி கிழங்கு பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்து உள் ளனர். மரவள்ளி கிழங்கு நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவுக்கு உட்பட்ட பரமத்தி, கபிலர் மலை, அண்ணா நகர், வாழ வந்தி, பெருங்குறிச்சி, சோழ சிராமணி, திடுமல், பாகம் பாளையம், சின்னமருதூர், கூடச்சேரி, கரசப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயி ரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளி கிழங்கு பயிர் செய்து உள்ள னர். இந்த பகுதிகளில் விளையும் மரவள்ளி கிழங்குகள் வியா பாரிகள் மூலம் வாங்கப்பட்டு புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, செல்லப் பட்டி, ஆத்தூர், மலைவேப்பங் குட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மரவள்ளி கிழங்கு மூலம் சிப்ஸ் தயார் செய் பவர்களுக்கும், சேகோ தொழிற்சாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. விலை சரிவு மரவள்ளி கிழங்குகளை வாங்கும் ஆலை உரிமையாளர் கள் மரவள்ளி கிழங்கில் உள்ள டார்ச் மற்றும் பாயிண்ட் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்கின்றனர். அதேபோல் ஜவ்வரிசி விலை சேகோசர்வ் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த

வாரம் 1 டன் மரவள்ளி கிழங்கை ஆலை உரிமையாளர் கள் மற்றும் சிப்ஸ் தயார் செய்பவர்கள் ரூ.4 ஆயிரத்து 200 வரை கொடுத்து வாங்கி சென்றனர். ஆனால் இந்த வாரம் ஆலை உரிமையாளர்கள் மற்றும் சிப்ஸ் தயார் செய்பவர்கள் 1 டன் மரவள்ளி கிழங்கை ரூ.3 ஆயிரத்து 500-க்கு வாங்குகின்றனர். ஜவ்வரிசி இருப்பு அதிகமாக உள்ள காரணத்தினாலும், வெளிமாவட்டம் மற்றும் வெளிமாநிலங்களுக்கு ஏற்று மதி செய்யும் அளவு குறைந்து விட்டதாலும், கொல்லிமலை பகுதியில் இருந்து கிழங்கு வரத்து அதிகரித்து உள்ள காரணத்தினாலும் மரவள்ளி கிழங்கு விலை சரிவடைந்து உள்ளது என விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

**ஒட்டாண்குளம் கண்மாயில் இருந்து முதல்போக பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு**

கூடலூர்

ஒட்டாண்குளம் கண்மாயில் இருந்து முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படுமா? என்று விவசாயிகள் எதிர்பார்ப்புடன் உள்ளனர். ஒட்டாண்குளம் கண்மாய்

கூடலூர் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள சுரங்கனார் நீர்வீழ்ச்சியில் இருந்து ஒட்டாண்குளம் கண்மாய்க்கு தண்ணீர் வருகிறது. மேலும் முல்லைப்பெரியாறு அணையில் இருந்து வைரவன் கால்வாய் வழியாக 10 மாதங்களுக்கு, தினமும் 5 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

இந்த தண்ணீர் மூலம் ஒட்டாண்குளம், ஈஸ்வரன்கோவில்புலம், பாரவந்தான், ஒழுகுவழி சாலை போன்ற பகுதிகளில் உள்ள சுமார் 406 ஏக்கர் விளைநிலங்கள் பாசனவசதி பெறுகின்றன. இந்த பகுதிகளில் உள்ள விவசாயிகள் இருபோக நெல் சாகுபடி செய்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த சில வருடங்களுக்கு முன்பு ஒட்டாண்குளம் கண்மாய்க்கு தண்ணீர் வரும் கால்வாயில்மண்சரிவுஏற்பட்டது.

விவசாயிகள் எதிர்பார்ப்பு இதனால் குளத்திற்கு தண்ணீர் வருவது தடை பட்டது. இதையடுத்து வைரவன் வாய்க்கால் மூலம் 18-ம் கால்வாய் வழியாக ஒட்டாண்குள கண்மாய்க்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. தற்போது கண்மாய் நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். மேலும் வெட்டு க்காடு, கப்பாமடை, தாமரைக்குளம், சட்ரஸ் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தற்போது முதல்போக நெல் விதைப்பு பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். இதனால் ஒட்டாண்குள கண்மாயில் இருந்து முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறக்கவேண்டும் என்று விவசாயிகள் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

**ஒரு பெட்டி உப்பு ரூ.3 ஆயிரத்துக்கும் ஏலம்**



சாத்தான்குளம்

சாத்தான்குளம் அருகே உள்ள விஜயராமபுரம் முத்தாரம்மன் கோவில் கொடை விழா ஆடி மாதம் கடைசி வாரத்தில் நடைபெறும். இதையொட்டி கோவில் கொடை விழாவுக்கு நிதி சேர்க்கும் விழா நடந்தது. இதில் பொதுமக்கள் காணிக்கையாக பல்வேறு நேர்ச்சை பொருட்களையும், உப்பு பெட்டிகளையும் வழங்கினர்.

பின்னர் அவற்றை ஏலம் விட்டனர். முதல் ஏலமாக விடப்பட்ட ஒரு பெட்டி உப்பை கோவில் தர்மகர்த்தா வரதராஜன் ரூ.3 ஆயிரத்துக்கு ஏலம் எடுத்தார். பின்னர் மற்ற அனைத்து பொருட்களும் ஏலம் விடப்பட்டது.

**அருவிகளில் நீர்வரத்து அதிகரிப்பு குற்றாலத்தில் சீசன் தொடங்கியது**



தென்காசி,

குற்றாலத்தில் 'குளு குளு' சூழல் நிலவி வருவதாலும், அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து இருப்பதாலும், இந்த ஆண்டுக்கான சீசன் தொடங்கி உள்ளது.

<u>*குற்றாலத்தில் சீசன்*</u>

நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலை அருகே குற்றாலம், தென்காசி, செங்கோட்டை பகுதிகள் அமைந்துள்ளன. குற்றாலத்தில், ஆண்டுதோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்கள் சீசன் காலம் ஆகும். இந்த 3 மாதங்களிலும் சாரல் மழை விட்டுவிட்டு பெய்யும். இடையிடையே இதமான வெயிலும் இருக்கும். மேனியை சிலிர்க்கச் செய்யும் குளிர்ந்த காற்று வீசும்.

குற்றாலத்தில் உள்ள மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவி, புலியருவி, சிற்றருவி மற்றும் சுற்றுலா பயணிகள் குளிக்க

அனுமதி இல்லாத செண்பகாதேவி அருவி, தேன் அருவி ஆகிய அனைத்து அருவிகளிலும் தண்ணீர் கொட்டும்.

அருவிகளில் குளித்து மகிழ்ந்து, சீசனை அனுபவிக்க தமிழகம் மட்டுமின்றி, பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் குற்றாலம் வருவார்கள்.

<u>சீசன் தொடங்கியது</u>

ஜூன் 1–ந் தேதி வழக்கமாக சீசன் தொடங்கும். இந்த ஆண்டுக்கான சீசன் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. இந்த மாத தொடக்கத்தில் குற்றாலத்தில் வெயில் சுட்டெரித்தது. அருவிகள் வறண்டு கிடந்தன.

கடந்த 3 நாட்களுக்கு முன்பு வெயிலின் தாக்கம் குறைந்தது. சாரல் மழை பெய்யத் தொடங்கியதால், சீசன் தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. பின்னர் மெயின் அருவி, ஐந்தருவிகளில் தண்ணீர் விழத் தொடங்கியது.

நேற்று காலையில் இருந்தே குற்றாலத்தில் சாரல் மழை விட்டுவிட்டு பெய்த வண்ணமாக இருந்ததால் சீசன் தொடங்கி இருக்கிறது. இந்த மழை தென்காசி, செங்கோட்டை மற்றும் சுற்றுவட்டார கிராமங்களிலும் நீடித்தது. குளிர்ந்த காற்று வேகமாக வீசியது.

மழை காரணமாக மெயின் அருவி, ஐந்தருவியில் நேற்று தண்ணீர் வரத்து அதிகரித்தது. மதியம் தண்ணீர் ஆர்ச் மீது விழுந்தது. இதனால் வெள்ளம் ஏற்படலாம் என்று கருதி, போலீசார் சிறிது நேரம் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதித்தனர். அதை தொடர்ந்து, சுற்றுலா பயணிகள் மீண்டும் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். சாரல் மழை தொடர்ந்து நீடித்தால், சீசன் களைகட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திருச்செந்துறையில் 518 வாழைத்தார்கள் ஏலம்**



திருச்சியை அடுத்த திருச்செந்துறை கிராமத்தில் அமைந்துள்ள வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார்கள் ஏலம் நடைபெற்றது. இதில் மொத்தம் 518 வாழைத்தார்கள் ஏலம் விடப்பட்டன. ஏலம் விடப்பட்ட 518 வாழைத்தார்களுக்கும் எந்தவித தரகுமின்றி அன்றே விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. சென்னக்கரை, குழுமணி, அல்லூர், வாத்தலை, செங்குடி, ஜீயபுரம், பெரியகருப்பூர், சின்னகருப்பூர், அதவத்தூர், அந்தநல்லூர், போசம்பட்டி, முள்ளிகுறும்பூர், கடியாக்குறிச்சி ஆகிய கிராமங்களிலிருந்து 26 விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தார்களுடன் ஏலத்தில் கலந்து கொண்டனர். பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, புத்தூர், கே.கே.நகர், ஏர்போர்ட், சீத்தலைவாய், அரியாவூர், குளித்தலை, நம்பியூர், அண்ணாநகர் ஆகிய ஊர்களிலிருந்து மொத்தம் 10 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.45,300 மதிப்பிற்கு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் ரஸ்தாலி அதிகபட்சமாக ரூ.245–க்கும், பூவன் அதிகபட்சமாக ரூ.210–க்கும், பச்சலாடன் தார் அதிகபட்சமாக ரூ.240–க்கும், மொந்தன் ரூ.55–க்கும், ஏலரிசிதார்

அதிகபட்சமாக ரூ.200–க்கும் ஏலம் போனது. தரமான வாழைத்தார்கள் நல்ல விலைக்கு ஏலம்போனது. அடுத்த ஏலம் வருகின்ற 23–ந் தேதி (செவ்வாய்கிழமை) நடக்கிறது.

தினகரன்

**தீவிரமடைந்தது தென்மேற்கு பருவமழை : கொட்டி தீர்த்த கனமழையால் மிதக்கிறது மும்பை**

மும்பை: அரபிக்கடலை ஒட்டியுள்ள மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 10 நாட்களாக பரவலாக பெய்து வந்த பருவமழை நேற்று கனமழையாக கொட்டி தீர்த்தது. அந்தேரி, கொலவா, நவிமும்பை உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பகலில் தொடங்கி இரவு முழுவதும் பெய்த மழையால் சாலைகளில் வெள்ளம் போல் மழைநீர் தேங்கியுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். மேலும் ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளன. பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் பருவமழை தொடங்கிய பின்னரும் வெயில் வாட்டி வதைத்த நிலையில் நேற்று கொட்டிய நிலையில் வெயிலின் தாக்கம் குறைந்தது. வதோதரா உள்ளிட்ட அம்மாநிலத்தின் பெரும்பாலன பகுதிகளில் பெய்த மழையால் பருவநிலை மாறியிருப்பதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். கனமழையால் சாலையில் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. இதே போல் நாட்டிலேயே அதிகபட்சமாக வெயில் வெளுத்துவாங்கிய ஆந்திர மாநிலம் தற்போது மழை பெய்ய தொடங்கியுள்ளது.

விசாகபட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று பெய்த கனமழையால் வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது. அதே நேரத்தில் கேரளாவில் தென்மேற்கு பருவமழை இன்னும் தீவிரமடையவில்லை. வழக்கத்தை விட 6 நாட்கள் தாமதமாக கடந்த 5-ம் தேதி பருவமழை தொடங்கியது. அவ்வப்போது சாரல்மழை பெய்தாலும் கனமழை பெய்யாததால் கேரள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**குளுகுளு சாரலுடன் குற்றாலத்தில் சீசன் துவக்கம்**




தென்காசி: குற்றாலத்தில் மூன்று வாரங்களுக்கு பிறகு ஒருவழியாக சீசன் துவங்கியது. மெயினருவி, ஐந்தருவியில் தண்ணீர் அதிகம் விழுந்ததால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர். குற்றாலத்தில் ஆண்டுதோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்கள் சீசன் காலம் ஆகும். இந்த ஆண்டு சீசன் குறித்த காலத்தில் துவங்காமல் கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் தாமதமாகி வந்தது. இதனால், சீசன்

கடைகளை ஏலம் எடுத்த வியாபாரிகள் கலக்கத்தில் இருந்தனர். கடந்த 3 நாளாக குற்றாலத்தில் சற்று இதமான சூழல் நிலவியது. மெயினருவியில் லேசாக தண்ணீர் கொட்டியது. இந்நிலையில், நேற்று காலை முதல் சாரல் விழத் துவங்கியது. நேற்று பகல் முழுவதும் வெயில் இல்லை. குளுகுளு சூழல் நிலவியது. காலை 10 மணி முதல் அதிரடியாக சாரல் துவங்கியது. மதியம் முதல் மெயினருவி, ஐந்தருவி ஆகியவற்றில் தண்ணீர் விழத்துவங்கியது. மெயினருவியில் மதியத்திற்கு பிறகு படிப்படியாக அதிகரித்து பாதுகாப்பு வளைவின் மீது தண்ணீர் கொட்டியது. தொடர்ந்து புலியருவியிலும் தண்ணீர் விழத்துவங்கியது. ஐந்தருவியில் ஐந்து பிரிவுகளிலும் தண்ணீர் நன்றாக விழுகிறது. இதற்கிடையே, மெயினருவியின் மேல்புறம் உள்ள செண்பகாதேவி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து மதியம் 3 மணியளவில் மெயினருவியிலும் தண்ணீர் அதிகரிக்கலாம் என்ற கணிப்பில் சுற்றுலா பயணிகள் குளிக்க போலீசார் தடை விதித்தனர். சீசன் துவங்கியது தான் தாமதம். அடுத்த சில மணி நேரங்களில் குற்றாலத்திற்கு சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகரித்தது. நேற்று முன்தினம் வரை அருவிகள் வறண்டு காற்றாடிய நிலையில், நேற்று சாரலுடன் அருவிகளில் தண்ணீர் வரத்தும் அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அருவிகளுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெங்காயம் சாகுபடியில் பூச்சிகள் தொல்லையா? கட்டுப்படுத்த இதோ வழி

சிவகங்கை, : வெங்காய சாகுபடியில் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் ஆலோசனை வழங்கினர்.

வெங்காயம் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கூறியது:நடவு வயலைச்சுற்றி இரு வரிசையில் மக்காச்சோளம் பயிரிடலாம். தரமான விதை வெங்காயத்தை தேர்வு செய்து, ஒரு கிலோவிற்கு சூடோமோனஸ் புளூரோசன்ஸ் 5 கிராம் உடன் டிரைகோடெர்மா 5 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்யலாம். நடவு வயலில் 1 ஹெக்டேருக்கு சூடோமோனஸ் புளூரோசன்ஸ் 1.25 கிலோவுடன் அசோஸ்பைரில்லம் 2 கிலோ மற்றும் பாஸ்போ பாக்டீரியா 2 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 250 கிலோ வீதம் கலந்து மண்ணில் இட வேண்டும்.

மஞ்சள் ஒட்டுப்பொறி ஹெக்டேருக்கு 12 எண்கள் வீதம் வைத்து, வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தலாம். இனக்கவர்ச்சிப்பொறி ஹெக்டேருக்கு 12 எண்கள் வீதம் வைத்து புழுக்களின் தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். சூடோமோனஸ் புளூரோசன்ஸ் 5 கிராம் பிவேரியா பேசியானா 10 கிராம் 1 லிட்டர் நீரில் கலந்து 30ம் நாள் தெளித்து தடுப்பு முறைகளை மேற்கொள்ளலாம். பூச்சி நோய்களை கட்டுப்படுத்த அசாடிராக்டின் மருந்தினை 2 மிலி, 1 லிட்டர் நீர் வீதம் கலந்து 40ம் நாள் தெளித்து கட்டுப்படுத்தலாம். பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ் 2 கிராம், 1 லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து தெளிக்கவும். ஒரு ஹெக்டேருக்கு ஒரு விளக்குப்பொறி வைக்கவும். கோடை உழவு செய்து கூட்டுப்புழுக்களை அழிக்கவும், பயிர்சுழற்சி முறையை கையாண்டு விவசாயிகள் லாபம் அடையலாம். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

**தாமதமாகும் பருவமழை நாற்றாங்காலுக்கு அடி உரம் இட தயங்கும் விவசாயிகள்**

சின்னமனூர், : மிழகத்தில் தென்மேற்கு பருவமழை தாமதமாவதால், சின்னமனூர் பகுதியில் நாற்றாங்காலுக்கு அடி உரம் இட விவசாயிகள்

தயக்க காட்டி வருகின்றனர்.கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் விவசாயத்திற்காக கடந்த 2ம் தேதி முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 119 அடியாக இருந்தது. பருவமழை தாமதத்தினாலும், போதிய மழை இல்லாததாலும் அணையின் நீர்மட்டம் உயராமல், தற்போது 115 அடியாக உள்ளது.

முல்லைப் பெரியாற்றில் திறந்து விடப்பட்ட தண்ணீரைக் கொண்டு, சின்னமனூர் பகுதியில் வேம்படிக்களம், முத்துலாபுரம் விலக்கு, கருங்கட்டான்குளம், மார்க்கயன்கோட்டை, குச்சனூர் ஆகிய ஊர்களில் சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் நெல் விவசாயம் செய்ய, நாற்றாங்கால் அமைத்துள்ளனர். நாற்றாங்கால்களில் 10 நாட்களுக்கு மேலாக நெல்நாற்று வளர்ந்து வருகிறது. 25வது நாளில் நெல் நாற்றுகளை அறிந்து வயலில் நடவேண்டும். ஆனால் தற்போது தென்மேற்கு பருவமழை தாமதமாவதால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். நாற்றாங்காலுக்கு அடி உரம் இடலாமா வேண்டாமா என குழப்பத்தில் உள்ளனர். தினந்தோறும் வானத்தில் மேகக்கூட்டங்கள் திரளுவதும், பின்னர் மழை பெய்யாமல் இருப்பதும் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை தருகிறது. வருணபகவான் கருணை காட்டினால், விவசாயிகள் வயலில் இறங்கி நிம்மதியாக முதல் போக நெல் விவசாயத்திற்கான பணியை மேற்கொள்ளுவார்கள்.

**“ஊட்டமேற்றிய தொழு உரம் விவசாயிகளுக்கு பெரு வரம்” வேளாண் அலுவலர்கள் விளக்கம்**

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் விவசாயிகள் எதிர்வரும் ஆடிப்பட்டத்தில் மானாவாரி நிலக்கடலைச் சாகுபடி செய்வதற்கு மழையினை

எதிர்பார்த்துக்கொண்டுள்ளனர். மானாவாரி நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ‘ஊட்டமேற்றிய தொழுஉரம் விவசாயிகளுக்கு பெருவரம்“ என வேளாண் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து புதுகை வேளாண் இணை இயக்குநர் (பொ) சதானந்தம், உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பொதுவாக தொழு உரத்தை மண்ணில் அடியுரமாக எல்லாவகை பயிர்களுக்கும் இட வேண்டும் என்பது குறித்து நெடுங்காலமாக வேளாண்மைத் துறை கூறி வருகின்றது. இதனால் மண்ணின் பவுதீக குணங்களான அமைப்பு, தொகுப்பு மற்றும் நிறம் செம்மைப்படுத்தப்படுகின்றன. மண்ணில் ஈரத்தை நிலை நிறுத்தும் திறன் கூடுகின்றது. மேலும், பயன்தரக்கூடிய நுண்ணுயிர்கள் மண்ணில் பன்மடங்கு பெருகுகின்றன. இதனால் விவசாயிகள் அதிக மகசூல் பெற வழிவகை செய்யப்படுகின்றது. தொழு உரத்தையே ஊட்டமேற்றும்போது இன்னும் பல்வேறு நன்மை பெறலாம்.

ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவதன் அவசியம்: மானாவாரிப் பயிர்கள் மண்ணிலுள்ள ஈரத்தை உறிஞ்சுவதற்கு நல்ல வேர் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகிறது. வேர் வளர்ச்சிக்கு மணிச்சத்து மிகவும் தேவை. மணிச்சத்தானது பயிரில் தொடக்க வளர்ச்சி நிலையில் தான் மிகவும் தேவைப்படுகிறது. ஒரு பயிர் தனது 20சத வளர்ச்சி நிலையிலேயே அப்பயிருக்குத் தேவையான 50 முதல் 60 சத மணிச்சத்தினை பயன்படுத்திக்கொள்கிறது என ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

மானாவாரி நிலங்களில் மண்ணில் ஈரத்தன்மை குறைவாக உள்ளதால்

மண்ணில் நாம் இடும் மணிச்சத்தானது உடன் பயிருக்குக் கிடைக்கும் வகையில் விரைவில் மாற்றப்படுவதில்லை. மானாவாரிப் பயிர்களுக்கு மணிச்சத்தை பயிரின் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்திலேயே கிடைக்கச் செய்ய ஒரு தொழில் நுட்பம் உண்டு. அதுதான் “ஊட்டமேற்றிய தொழு உரம்”.

தயாரிக்கும் முறை: விதைப்பதற்கு 30 நாட்களுக்கு முன்பாக 300 கிலோ அதாவது ஒரு மாட்டு வண்டி அளவில் நன்கு மட்கிய தொழு உரத்தை எடுத்து அதில் ஒரு ஏக்கர் சாகுபடி செய்யவுள்ள மானாவாரி நிலக்கடலைப் பயிருக்குப் பரிந்துரை செய்யப்படும் 25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ பொட்டாஷ் உரங்களைச் சேர்த்து நன்கு கலக்க வேண்டும். இவ்வாறு நன்கு கலக்கிய பின்பு அதனை மழை மற்றும் வெயில் இல்லாத இடத்தில் குவியலாக்கிக்கொள்ள வேண்டும். குவியலை நன்கு தட்டி இறுக்கி விட வேண்டும்.
பின்பு குவியலைக் களிமண் கொண்டு நன்கு மூட்டம் செய்து வைக்க வேண்டும். அதாவது, குவியலுக்குள் 30 நாள் காற்றுப் புகாதவாறு செய்ய வேண்டும். பின்பு கடைசி உழவிற்கு முன்பு இக்குவியலை எடுத்து அதில் 9 கிலோ யூரியாவையும், 80 கிலோ ஜிப்சத்தையும் நன்கு கலந்து நிலத்தில் தூவி பின்பு கடைசி உழவு செய்து விதைப்பு செய்ய வேண்டும்.எனவே புதுகை மாவட்ட விவசாயிகள் மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்வதற்கு இப்பொழுதே மேற்கண்ட முறையில் ஊட்டமேற்றிய தொழு உரத்தினைத் தயார் செய்து மானாவாரி நிலக்கடலைச் சாகுபடிக்குப் பயன்படுத்தி நல்ல மகசூலைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

**கரூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு**

கரூர், : விவசாயிகளின் நலன் கருதி கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு சம்பா பருவத்தில் விளைந்துள்ள நெல்லினை கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.குளித்தலை தாலுகாவில் நங்கவரம் (பங்களாத்தெரு), நச்சலூர் ஆகிய இரண்டு இடங்களிலும், கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் கோவக்குளம் (கிருஷ்ணராயபுரம் தெற்கு), பஞ்சப்பட்டி (கிழக்கு வாசல்), கட்டளை (ஊராட்சி அலுவலகம்) என 3 இடங்களிலும், கரூர் தாலுகாவில் சுக்காலியூர் (தோரணக்கல்பட்டி), சுக்காலியூர் செக்போஸ்ட். அரவக்குறிச்சி தாலுகாவில் சின்னதாராபும் சமூதாய கூடம், மண்மங்கலம் தாலுகாவில் பள்ளபாளையம் (மொச்சக்கொட்டாம்பாளையம்) ஆண்டாங்கோயில் மேற்கு என தலா ஒரு இடங்கள் என நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத்தொகையும் சேர்த்து நெல் கிரேடு “ஏ” ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,470ம், பொது ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,410ம் வழங்கப்படும். நெல் கொள்முதல் செய்யும் இடத்தில் மின்னணு தராசு மூலம் சரியான அளவில் எடையிடப்பட்டு 17 சதவீத ஈரப்பதத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ள திரிபுகளுக்கு உட்பட்டு உள்ள நெல் கொள்முதல் செய்யப்பட்டு அதற்குண்டான தொகை ரொக்கமாக உடனடியாக வழங்கப்படும். எனவே, விவசாயிகள் அறுவடை செய்த நெல்லினை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடையுமாறு கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.